ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 11. பிறவி முடிச் சருக்கம்

970. நிறை பொறை சாந்தி ஓம்பி நின்றது ஒன்றின்மை சிந்தித்து
அறிவன் சரணம் மூழ்கி ஆருயிர்க்கு அருளி அந்தம்
பிறவியின் ஒருவிச் சித்த விரதம் பெய் இரும்பிற் பெற்ற
அறநெறி அதனின் வந்திங்கு அரசிளம் குமரனானான்

மனநிறைவு, பொறுமை, அமைதி ஆகிய பண்புகளை ஏற்று வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைச் சிந்தித்து அருகனது திருவடிகளை மனங்கொண்டு, அனைத்து உயிர்களிடத்தும் அருள்பூண்டு, சித்தரசம் பெய்த இரும்பினைப் போல் ஒளிபெற்று அறநெறி மேற்கொண்டதால் - அந்த நரகத்தினின்றும் விடுபட்டு, இம்மண்ணுலகில் அரச குமாரனாக அவதரித்தனன்.

971. மற்று இந்தத் தீபத்தின்கண் இரேவதத்து அயோத்தி ஆளும்
கொற்றவன் சிரிவர்மாவின் காதலி சுசிமைக் கொம்பின்
பெற்றியாள் வயிற்றுச் சீதாமா எனும் சிறுவனாசிக்
கொற்றவர் குலங்கள் என்னும் குலமலை விளக்கை ஒத்தான்

இந்தச் சம்பூத்தீவிலே ஐராவத க்ஷேத்திரத்தில் அயோத்தி நகரத்தின் அரசன் ஸ்ரீவர்மாவுக்கும், அவனால் அன்புடன் நேசிக்கப்பட்ட தேவி 'சுசிமை' என்பாள் வயிற்றிலே 'சீதாமா' என்னும் மகனாகப் பிறந்து, அரச குலங்கள் என்னும் மலைகளுக்கு ஒளி அளிக்கும் விளக்கைப் போல் விளங்கினான்.

972. வினையத்தின் முனிவன் ஒத்து விஞ்சையின் வளர்ந்த வீரன்
நினைஒத்துத் தீயவேந்தர் நிலைகெடுத்து அரசுமேவி
கணமொத்து எவ்வுயிர்க்கும் ஈந்து கமலப்பூந்தடத்து வெய்யோன்
தனைஒத்து மரைமுகத்தார் தம்முலைத் தொய்யிற் பட்டான்.

முனிவருக்கு நிகரான பணிவுடையவனாகி, அரசர்களுக்கேற்ற கலைகளுடன் வளர்ந்து வீரனாக விளங்கிய அரச குமாரன் தனது சிந்தனையை நந்நெறியிற் செலுத்தி, பகைவேந்தர்தம் ஆற்றலை அடக்கி, அரசு மேற்கொண்டு, மழை மேகம் போல் எல்லா உயிர்களுக்கும் உதவிசெய்து, தாமரைக் குளத்தினை ஒளிபெறச் செய்யும் கதிரவனைப் போல் விளங்கி, தாமரை மலர்போன்ற முகமுடைய அழகிய பெண்களின் தொய்யில் எழுதப்பட்ட மார்பகங்களில் மகிழ்ச்சியை எய்தினான்.

973. அழலிடை வந்த மைந்தன் அவ்வழல் தணியும் எல்லை
நிழலிடை இருப்பதே போல் நிரயத்துத் துயரம் தீரக்
குழலன மொழியினார்தம் குவிமுலைத்தடத்து வைகிப்
பழவினை துணிக்க நின்ற பான்மை வந்துதித்த நாளால்

நெருப்பிலே கிடந்து வந்தவன் அந்த அழலின் வெப்பம் தீரும்வரை நிழலிலே நிற்பதைப் போல்; நரகத்துன்பம் தீருமாறு குழல் போன்ற இனிய மொழியினையுடைய அழகிய பெண்களின் மார்பகம் பொருந்திக் கிடந்தபோது, பழைய வினைகள் தீரும்படியான பான்மையானது தோன்றியது.

974. அந்தமில் வினைக்கு மாறாம் அனந்தமா முனிவன் பாதம்
வந்துஅவன் வணங்கி மாற்றின் வடிவெலாம் முடியக் கேட்டிட்டு
இந்திர விபவம் தன்னை எரியுறு சருகின் நீக்கி
வெந்திறல் வேந்தர் வீரன் மெய்த்தவத்து அரசன் ஆனான்

ஆன்ம குணங்களை அழிக்கும் தீவினைகளுக்கு எதிராகிய முழுமையான மெய்ஞ்ஞானங்களையுடைய பாதங்களைச் சேர்ந்து வணங்கி, அவரால் அருளப்பட்டசம்சார இயல்பினைக் கேட்டு ஏற்றுக்கொண்ட சீதாமா, தேவவைபவம் போன்ற அரச பதவியை நெருப்பிலே விழுந்தவுடன் கருகிப்போகும் சருகுக்கு நிகராக எண்ணி அரசைத் துறந்து, மெய்த்தவம் என்னும் மேலான அரசினை மேவினான்; அதாவது துறந்து முனிவனானான்.

975. யோகங்கள் மூன்றும் சிந்தையுடன் செலவடங்கி ஊற்று
மோகங்கள் முதுகிட்டு ஓட முனிமையை முகடு கொண்டு
நாகங்கள் நடுங்க நோற்று ஆராதனை நான்கின் நீங்கிப்
போகங்கள் புகழலாற்றா பம்மநற் கல்பம் புக்கான்.

முனிவராகநின்ற அவன் மனவசன காயங்கள் மூன்றையும் தர்மத்தியானத்தில் செலுத்தி, மோகனீய கர்மங்கள் தோன்றாவண்ணம் அவற்றை வென்று முனிவரது ஒழுக்கத்தை முழுமையாக ஏற்று, தனது தவப்பெருமையைக் கண்டு விண்ணவர் பெரிதும் போற்றும் அளவிற்கு உயர்ந்து நான்குவித ஆராதனை தியானத்தோடு உடலை நீங்கி பெரும் போகங்களை நல்கிடும் பிரம்ம கல்பத்து தேவனாயினன்.

976. தன்னுள்ளே நின்று தன்னைத் தான் நரகத்துள் உய்க்கும்
தன்னுள்ளே நின்று தன்னைத் தான துறக்கத்து வைக்கும்
தன்னுள்ளே நின்று தன்னைத் தான் தடுமாற்றுள் உய்க்கும்
தன்னுள்ளே நின்று தன்னைத் தான் சித்தி அகத்துவைக்கும்.

தனக்குள் அசுபோப யோகத்தில் நிலைத்து நின்று, அச்சிந்தனை காரணமாகத் தானே தன்னை நரகங்களிலே செலுத்தும். அதே ஆன்மா தனக்குள் சுபோப யோகத்தில் நிலைத்து நின்று தானே தனக்கு அமர வாழ்வு பெற வைக்கும். தனக்குள் தானே சுபாசுப யோகத்தில் நின்று தன்னை நான்கு கதிகளில் சுழலச் செய்யும். நிச்சய நயத்தால் சுத்தோப யோகத்தில் நிலைத்து நின்று வினைகளை அறவே ஒழித்து சித்தலோகத்தே வைக்கும்.

977. என்னும் இம்மொழிக்கு இலக்காய் வந்தனம் இதனைக் கண்ட
பின்னும் நல்லறத்தைத் தேறார் பேதைமை ஆதியார்கள்
பன்னகர்க்கு இறைவ பஞ்சாணுத்தரம் புக்க பைந்தார்
மன்னவன் வச்சிராயுதன் காண் வந்து சஞ்சயந்தன் ஆனான்.

என்று கூறப்படும் ஆகமப் பொருளுக்குச் சான்றாக நாம் இவ்வாறு தோன்றி வந்தோம். இவற்றைக் கேட்ட பின்பும், நல்லறத்தைத் தெளியாதவர்கள் அறியாமைக்கு முதன்மையானவர்களாய், மோகனீய கர்ம உதயத்திற்கு உரியராவர். பவணர்களின் தலைவனே பஞ்சாணுத்தரமென்னும் அகமந்திர உலகில் இருந்த சிம்மசேன மன்னன் மண்ணுலகில் வச்சிராயுதன் என்னும் அரசனாகி பின்பு, சஞ்சயந்தனாகித் தோன்றி துறந்து தபோபலத்தால் வீடு பெற்றான்.

978. பாகொத்த மொழியினா ரோடு இன்பத்துப் படிந்து சீதாமா
கற்பத்து இழிந்து மைந்தன் சயந்தனாய் வளர்ந்து மாய
போகத்துக்கு இவரிச் சித்தி புகுது நற்காட்சிபோக
நரகத்துக்கு இறைமை பூண்ட நம்பி நின் வரவு இதுஎன்றான்.

பாகுபோல் இனிக்கும் மொழியினராகிய தேவமாதர்களுடன் இன்பத்தில் படிந்து, சீதாமாவாக இருந்த பிரம்ம கல்பத்து தேவன் அங்கிருந்து வந்து சயந்தன் என்னும் பெயருடையவனாய் வளர்ந்து, நிலையற்ற இல்லற இன்பத்தை விரும்பி, வீட்டினை நல்கும் நற்காட்சியானது நீங்க பவண லோகத்துக்குத் தலைவனாகிய நம்பியே உனது வரவு இத்தன்மையதாகும் என்று ஆதித்யாபன் கூறினான்.

979. சேகு ஒத்த மனத்து வேடன் தீவினை துரப்பச் சென்று
மாகவி பெற்ற அந்த ஆயுவும் கழிந்து மண் மேல்
நாகத்தில் தோன்றி மூன்றாம் நரகத்துப்புக்குத் தீமை
வேகத்தில் விலங்கில் ஐந்து பொறியுளும் சுழன்று செல்வான்.

மரத்தின் வயிரம் போன்ற மனத்தினையுடைய அதிதாருணன் என்னும் வேடன், பாபகர்மம் துரத்த ஆயுள் முடிந்த மாகவி என்னும் ஏழாம் நரகத்தில் வீழ்ந்து அந்த ஆயுளும் ஒழிய இவ்வுலகில் பாம்பாகப் பிறந்து தீவிரப் பரிணாமத்தால் மீண்டும் மூன்றாம் நரகம் அடைந்து, மறுபடியும் தாவரம், விலங்கு கதிகளில் உழன்று, ஐம்பொறியுடைய பிராணிகளாகவும் பிறவி எடுக்க அந்த வாழ்வும் முடிந்து,

980. வந்து இந்தப் பரதத்தின்கண் பூதரமண வனத்தில்
அந்தரத்து அணியில் செல்லும் நதி அயிராவதியின்
தன்கரைத் தாபதற்குத் தலைவன் கோசிருங்கன் பன்னி
மந்தம் சேர் சங்கி மைந்தன் சிருங்கம்சேர் மிருகனானான்.

இந்தப் பரதகண்டத்தில் பூதரமணமென்னும் காட்டின் நடுப்பகுதியில் அழகுடன் ஓடும் ஐராவதி ஆற்றின் கரையில் தங்கியிருக்கும் தாபதர்களின் தலைவன் கோசிருங்கனுக்கு அவன் மனைவி சுங்கிக்கும், மிருகசங்கன் என்னும் மைந்தனாகப் பிறந்தான்.

981. பரல்மிசைக் கிடந்தும் முள்ளின் பலகையில் துயின்றும் பஞ்ச
எரிநடுப் பகலின் நின்றும் இராவகம் வருடம் புக்கும்
கரையுடை மடையிற் சேர்ந்தும் கலையின் பின் ஓடிக்காமத்து
உரையுடை அவரில் சீத குடங்களைத் தழுவித் தோளால்

அவன் பருக்கைக் கற்களின் மேல் படுத்தும், இரும்பு முட்பலகையில் தூங்கியும், நடுப்பகலில் பஞ்சாக்னியில் நின்றும், நள்ளிரவில் பெய்யும் மழையில் நின்றும் அல்லது ஓடும் நீரில் நிலைக்க நின்றும், மான் கூட்டங்களைத் தொடர்ந்து ஓடியும், காம உணர்வுடையவர்களைப்போல் குளிரில் நீர் நிறைந்த குடங்களைத் தனது தோள்களால் தழுவியும் –

982. தூங்கும் உறிகிடந்தும் நல்லார் தோளினைப் புணர்ந்தும் தூய்மை
வாங்கிய தவத்தில் செல்வான் வானத்து ஓர்விஞ்சை வேந்தன்
தீங்கிலா விஞ்சுமாலி திவி திலகத்து நாதன்
ஆங்கு வந்தவனைக் கண்டு ஆங்கு அண்ணைதான் நிதானம் செய்தான்.

தொங்கும் உறியில் உட்கார்ந்தும், பெண்களின் தோள்களைக் காமத்தால் தழுவியும், தூய்மையற்ற தீய தவத்தை மேற்கொண்டவன் விண்வழியாக அங்கு வந்த திவிதிலகமென்னும் நகரத்தின் தலைவனும், நற்குணமுடைய வித்யுன்மாலினி என்னும் பெயருடைய விஞ்சையனைக்கண்டு அக்கணமே தான் அவனைப்போல் ஆகவேண்டுமென்று நிதானம் கொண்டான் (ஆசைப்பட்டான்).

983. மற்றுஇவன் தனக்குப்போல் தவத்தின்மேல், எனக்கு வந்துஇச்
சுற்றமும் செலவும், வேந்தும் தொக்குடன் நிற்க என்றுஇப்
பெற்றியை நினைத்துச் சென்றப் பிறப்பின் கண் நீங்கி வெள்ளி
வெற்பின் கண் வடக்கில் சேடி கனகபல்லவந்து வேந்தன்.

இந்த விஞ்சையனுக்கு அமைந்த வைபவம் போல் என் தவப்பயனால் எனக்கும் அடுத்த பிறவியில் கிடைக்க வேண்டும்; சுற்றமும் சேர வேண்டும். விண்ணில் செல்வதும், அரச பதவியும், ஒருங்கே எனக்கு அமைய வேண்டும் என்னும் சிந்தனையோடு தியானம் செய்து தவமியற்றி, பிறகு அப்பிறவி நீங்கி விஜயார்த்த மலையில் வடசேணியில் கனகபல்லவம் என்னம் நகரத்துக்கு விஞ்சையர் வேந்தனாக அவதரித்தான்.

984. வச்சிரதந்தனுக்கும் மாதர்வித்துப் பிரபைக்கும்
இச்சையால் தோன்றி வித்துத்தந்தன் என்று இயம்பப்பட்டான்
வச்சிரப் பிளவு போலும் வேரத்தால் வந்த பாவத்து
இச்செய்கை முனிக்குச் செய்தான் இவன் அந்த அமைச்சன் கண்டாய்

வச்சிரதந்தன் என்னும் வித்யாதரனுக்கும் வித்துப்பிரபை என்னும் பட்டத்தரசிக்கும் ஆசை மகனாகத் தோன்றி, வித்துத்தந்தன் என்னும் பெயர் பெற்றனன். கடிய கற்பிளப்பு போன்ற வைர பாவத்தால் உண்டான தீவினை உதயத்தால் இந்தச் சஞ்சயந்த மாமுனிவருக்கு இத்தகு கொடுமைகளை வித்துத்தந்தன் இழைத்தனன். இவன்தான் பல பிறவிகளுக்குமுன் சிம்மசேன அரசனுக்கு அமைச்சனாகிய சீபூதி யாவான் என்பதை அறிவாயாக.

985. வேரத்தால் வேந்தற்கு என்றும் பகைவனாய் வெய்ய துன்ப
பாரத்தை முடியச் சென்றான் பகைவனாய்த் தனக்குத்தானே
வேரத்தை ஒன்றுமின்றி வேந்தனும் வீட்டில்இன்பப்
பாரத்தை முடியச் சென்றான் பன்னகர்க்கு இறைவ என்றான்.

பவணர்களின் தலைவனே வைரத்தால் சிம்மசேன அரசனுக்கு எப்போது பகைவனாகவே இருந்து தனக்குத்தானே பகைவனாகி பாபகர்மங்களைச் சேர்த்துத்தானே பகைவனாகி பாபகர்மங்களைச் சேர்த்துத்தனது ஆன்மாவிற்குக் கேடு செய்தான்; அதனால் பெருங்கேடெய்தினான். மனதில் சிறிதும் வைரம் கொள்ளாத அரசன் முடிவற்ற இன்பத்தை வீட்டுலகில் எய்தினான்.

986. மந்திரி, நாகம், மானமா, பின் வாரணத்தின் நாகம்
வெந்தெரி நரகன், மிக்க மாசுணம், நரகன், வேடன்
அந்த மாநரகன், நாகம், ஆரழல் நரகன், மற்றும்
மைந்தன் சங்கிக்கு, வித்துத்தந்தன் தன் வரவுஇதாமே.

ஸ்ரீபூதி அமைச்சனானவன் அகந்தனப்பாம்பாகி, சமரீ மிருகமாகி, கோழிப் பாம்பாகப் பிறந்து, பிறகு கொடிய மூன்றாம் நரகத்தில் வீழ்ந்து, அடுத்து மலைப்பாம்பாகி பிறகு நான்காம் நரகத்தில் சிக்கி, அதன் பின் வேடனாகப் பிறந்து இறுதியில் ஏழாம் நரகத்தில் ஆழ்ந்து மீண்டும் பாம்பாகப் பிறந்து மறுபடியும் வெம்மை மிகு மூன்றாம் நரகத்தில் வீழ்ந்து, அதன்பின் சங்கிக்குப் புதல்வனாகி இப்போது வித்துத்தந்தனாக வந்துள்ளான்.

987. மன்னவன், மத்தயானை, சாசாரன் விஞ்சை வேந்தன்
பின்னை, காவிட்டதேவன், பெரியவச்சிராயுதன் பின்
பன்னரும் தவத்தின் பஞ்சாணுத்தரத்து அமரன் பார்மேல்
மன்னிய புகழினான் சஞ்சயந்தன் தன் வரவிதாமே.

சிம்மசேன மாமன்னன் மதயானையாகி, சகஸ்ரார கல்பத்து அமரனாகத் தோன்றி, அடுத்து கிரண வேகன் என்னும் விஞ்சை வேந்தனாகப் பிறந்து, பிறகு காபிட்ட கல்பதேவனாய் அடுத்து மண்ணுலகில் வச்சிராயுதனாகப் பிறந்து தவம் புரிந்து பஞ்சாணுத்தர அமரனாகி அதன்பின் இங்கு நிலைத்தப் புகழுடைய சஞ்சயந்தனாக அவதரித்தனன்.

988. வயிரத்தை ஒருவர்க்கு ஆக்கி இருவர்க்கும் பிறவிதோறும்
துயரத்தை விளைத்தல் சொன்னால் இவர்களே சொல்ல வேண்டாம்
மயரிகண் மறத்தின்நீங்கி நாகபாசத்தை வாங்கி
உயிரொத்து இங்கு இவனோடு ஒன்றி ஒழுகு நீ உரகர் கோவே.

தரணேந்திரனே வைரத்தை ஒருவன் உண்டாக்கி இந்த இருவர் பிறவிதோறும் எய்திய துயரத்தைக் கூறவேண்டுமானால், இந்த இருவருடைய வரலாறே போதுமானதாகும். வேறு சொல்ல வேண்டாம். எனவே பேதமையால் மயங்கிக் கிடக்கும் இந்த வித்துத்தந்தன் மேல் வைரம் கொள்ளாது நீக்கி, இவனைப் பிணித்துள்ள நாகபாசத்தை விலக்கி இவனுடன் நட்பால் இணைந்து தயையுடன் ஒழுகுவாயாக.

989. என்றலும் இறைவ அன்று என் நரகத்துள் இடும்பை தீர்த்தாய்
இன்றும் இப்பிறவி எல்லாம் நின்றவாறு எனக்குச் சொல்லி
வென்றவர் அறத்தில் காட்சி விமலமதாகச் செய்தாய்
என்தனக்கு இறைவன் நீயே இன்னம் ஒன்று அருளிச் செய்வாய்.

என்று ஆதித்யாபன் சொன்னவுடன் தரணன் அவனை நோக்கி, 'தலைவனே எனது நரகத் துன்பங்களை எல்லாம் அன்று தீர்த்தாய்; இன்று பிறப்புக்கள் அனைத்தையும் நான் உணருமாறு விளக்கினாய்; வினைகளை வென்ற இறைவனின் அறத்தினால் நற்காட்சியை நான் தெளியச் செய்தாய்; எனக்கு நீயே ஆசிரியன்; மேலும் ஒன்று கூறுகின்றேன்; கேட்டருள்'.

990. விஞ்சையின் வலியில் போகி, மேதக்கோர் தம்மை வவ்வித்
தஞ்சிறை வைக்கும் வித்துத்தந்தன் தன் குலத்து மிக்க
விஞ்சையைப் பறித்து வீழ்ந்த சிறகுடைப் பறவைபோல
விஞ்சைமாநகரத்துள்ளே இருத்துவன் இவரை என்றான்.

வித்தைகளின் வலிமையினாலே விண்வழி சென்று, மேலோர்களை வலிதிற்பற்றி தம்மிடத்து சிறை வைக்கும் வித்துத்தந்தன் குலத்தோரின் வித்தைகளை எல்லாம் பறித்து அவர்களை சிறகிழந்தப் பறவைகளாக்கி, அவர்தம் நகரத்திலேயே கிடக்கச் செய்வேன்

991. என்றிடா உரைப்ப, ஆதித்தாபன் இப்பிழை பொறு, என்னப்
பொன்றிடாக் கேதம்சூழாது, இவர்கள் என் வெகுளி நீங்காது
என்றிடா உரைத்து, மேனாள் இறைவ நின் அருளினாலே
மன்றுலாம் குழலினார்க்கே, மாவிஞ்சைப் பணிசெய் கென்றான்.

என்று கூறவும், ஆதித்யாபன் இவனது பிழையைப் பொறுத்துக் கொள் எனவும், இறைவனே இந்த விஞ்சையர்களால் அழிவும் ஆபத்தும் இல்லாமல் இவர்தம் விஞ்ஞைகள் எல்லாம் உனது அருளினாலே, வித்யாகரே மகளிர்க்கே அமைவதாக அப்போதுதான் எனது வெகுளி நீங்கும் என்றனன்.

992. இவ்வண்ணம் செய்திடனேல், இருட்பிழம்பு இரண்டு மின்னும்
கவ்வியதனையமேனி, கடையர்தம் களிப்பினாலே
எவ்வழியானும் ஓடி, எளியவர் தம்மை எல்லாம்
கவ்வைகள் பலவும் செய்வர், மேல் வரும் காலத்து என்றான்

இவ்வாறு செய்யாதுபோனால் இருள் உருண்டு நின்ற மேனியில் மின்னற்கொடி இரண்டு இருப்பதைப் போன்ற, வெண்ணிற கோரைப் பற்களையுடைய, கீழோராகிய இவ்விஞ்சையர், களிப்பின் மிகுதியால், திக்குகள் எங்கும் ஓடி எளியவர்களைப்பற்றித் துன்புறுத்துவர். இந்தத் தொல்லைகள் எதிர்காலத்தில் தொடர்ந்து நிகழும் என்றான்.

993. மௌவலம் குழலினாரும் மாவிஞ்சை அடிப்படுப்பார்
செவ்வியாம் சஞ்சயந்தன் திருவடிக்கமலம் சேர்ந்து அங்கு
அவ்வியமின்றி நின்று சிறப்பயர்ந்து ஓதின்அல்லால்
எவ்வகை விஞ்சை யேனும் எதிர்வரல் ஒழிக என்றான்.

முல்லை மலரணிந்த அழகியக் கூந்தலையுடைய விஞ்சையர் மகளிரும், தூயமனத்தினராய் சஞ்சயந்த பட்டாரகரது பாதகமலங்களைப் பணிந்து வஞ்சனை சிறிதுமின்றி தியானத்துடன் அருக பூஜையைச் செய்து அந்தமந்திரங்களைக் கற்பார்களேயாயின் அவை வயப்படும். இல்லையேல் எந்த ஒரு விஞ்சையும் பெறாது ஒழிவார்களாக, என்றான்.

994. தரைமகள் திலகமன்ன தடவரை இதன்கண் மேனாள்
பிரமரிமுதல விஞ்சை அடிபடப் பிணைய னாருக்கு
இரிமந்தான் இக்குலத்து மைந்தர்க்கு ஆக என்று இதன்பேர்
இரிமந்தம் என்றோர் குன்றின் இறைவன் ஆலயம் சமைத்தான்

இந்தப் பூமிதேவியின் திலகமாக விளங்கும் சஞ்சயந்தர் வீடுபெற்ற இம்மலையின்மேல், பெண்மான் போன்ற அழகிய விஞ்சை மகளிர்க்கு எதிர்காலத்தில் 'பிரம்மரி' முதலிய வித்தைகள் வசமாகும். ஆடவர் முயன்றால் அவர்கட்கு மானபங்கம்தான் மிச்சம். இம்மலையின் பெயர் இரிமந்தம் என அமையும் என்று அம்மலைமிசை சஞ்சயந்த பட்டாரகற்கு, ஓர் ஆலயம் அமைத்தான்.

995. மஞ்சுலா மலைமேல் மலி மாநகர்
பஞ்ச நன்மணியோடு பசும்பொனால்
சஞ்சயந்த பட்டாரக சட்டகம்
நஞ்சுகட்கு இறைவன் செய்து நாட்டினான்

நாகர்களின் தலைவனாகிய தரணேந்திரன், மேகங்கள் சூழ்ந்திருக்கும் அந்த இரிமந்த மலையின்மேல் ஐந்துவகையான வண்ண மணிகளுடன் பசும்பொன்னால் ஆலயத்தை அமைத்து, சஞ்சயந்தருடைய பிரதிமையைப் பிரதிட்டை செய்தான்.

996. முழவு தண்ணுமை, மொந்தை முழங்கின
முழை மழையின் முரன்ற வலம்புரி
கழல நின்று அழைத்திட்டன காகளம்
குழலோடு ஏங்கின வீணைக் குழாங்களே.

அப்போது முழவு, தண்ணுமை, மொந்தை முதலிய இசைக்கருவிகள் முழங்கின, இருண்ட மேகம் முழங்கிப் பொழிவது போல் வலம்புரிச்சங்குகள் முரன்றன, அழைப்போதுபோல் எக்காளங்கள் சப்தித்தன, குழலுடன் வீணைகள் கூடி இசைத்தன.

997. நிரந்த கின்னரர் கீத நிலமிசை
அரம்பையர் மின்னின் எங்கணும் ஆடினார்
சுரந்த காதலில் சொற்றழகாக நல்
சுரம்குவித்து உரகர்க்கு இறை ஏத்தினான்.

கின்னர தேவர்களின் இசை முறையாக அமைந்தது. மின்னல் கொடிபோன்ற தேவமகளிர் எங்கும் ஆடினர், பவணர்களின் தலைவனாகிய தரணேந்திரன் நிறைந்த பக்திப் பரவசனாகி, அழகாகக் கைகளைக் குவித்து, புகழ் அமைந்த சொற்களால் போற்றலாயினன்.

998. கலையிலா அறிவன்நீ கலனிலா அழகுநீ
மலைவிலா மதனு நீ மறுவிலா மதனுநீ
உலகினுள் ஆயும்நீ உலகின் உள்ளாய்ஒரு
நிலையிலா நிலையை நீயாகிலும் இறைவன்நீ

முறையாக வளரும் மதி, சுருதி, அவதி, மனப்பர்யம் போன்ற ஞானங்களைப் போலல்லாமல், ஒரே சமயத்தில் அனைத்தையும் அறியும் வாலறிவன் நீ, எவ்வித அணிகளும் அணியாத அழகு மிளிர்பவன் நீ. மாறுதலற்ற முக்திஇன்பம் எய்தியவன் நீ; குற்றமற்ற முக்தி மார்க்கமும் நீயே; மாமுனிவர்களால் ஆய்ந்தறியும் உயர்பொருளும் நீயே; ஒரு நிலையலாத நிலைமையை உடையவனாக இருந்தாலும், இறைவனே நீ நிலையாக இருக்கின்றாய்.

999. அமலன்நீ, அறிவன்நீ, அருகன்நீ, அசலன்நீ
விமலன்நீ, வீரன்நீ, வேரமில் ஒருவன் நீ
துமிலன்நீ, துறவன்நீ, சுகதன்நீ, சிவனுநீ
கமலன்நீ, கருணைநீ, கைவலச் செல்வன்நீ

நீ குற்றமற்றவன், அனைத்தையும் அறிபவன், அனைத்திற்கும் உரியவன் நீயே, நீ சலனமில்லாதவன், தூயவன் நீயே, நீ அனந்தவீரியன். நீ வைரமற்ற ஒருவன், ஓங்கார வடிவன் நீயே; அகப்புற பற்றற்றவன் நீ, நீயே அனந்தசுகன் நீயே முக்தி நாயகன், கமலாசனன் நீ, கருணாகரன் நீயே, கைவலச் செல்வன் நீயே.

1000. இறைவன்நீ, ஈசன்நீ, எண்குணத்தலைவன்நீ,
பொறியிலா அறிவன்நீ, பூசனைக்கு இறைவன்நீ
மறுவிலா ஒருவன்நீ, மாதவத்தலை வன்நீ
சிறியயான் நின்குணம் செப்புதற் கரியன்நீ.

நீயே தலைவன், நீயே முதல்வன், அனந்த ஞானாதி எண் குணங்களின் தலைவன் நீ, நீயே ஞானஸ்வரூபி, மூவுலகத்தவராலும் பூசிக்கப்படுபவன் நீ, நீயே குற்றமற்ற சுயம்புவாகும், கணதராதி மாமுனிவர்கட்கு தலைவன் நீயே, மிகக் குறைந்த ஞானமுடைய என்னால் உனது அனந்த குணங்களை எடுத்துக்கூற இயலா அரியவன் நீயே.

1001. இனையன துதிகள் சொல்லி இருக்கை ஓர்இரண்டு நான்கும்
மனமலி வணக்கந்தோறும் மூவகைச் சுழற்றி மாண்பின்
வினையற எறிந்த கோனை விண்ணவ ரோடு மின்னும்
கனைகழல் உரகர் கோமான் கைதொழுது இறைஞ்சிப் போனான்

கர்மங்கள் அடியோடு ஒழியும்படி நீக்கிய தலைவனாகிய சஞ்யந்தபட்டாரகனை, நால்வகை அமரர்களுடன் ஒளிமிக்கதும், ஒலிக்கின்றதுமான வீரக்கழல்களை அணிந்த தரணேந்திரன் இவ்வாறு புகழ்ந்து துதித்து, நின்றும் அமர்ந்தும் வணங்கி மனதில் நால்வரையும் பொருந்தி கைகளை அழகாகக் குவித்து மும்முறை சுழற்றி, படிந்தும் பணிந்தும் வணங்கிய பிறகு தனது இருப்பிடம் ஏகினான்.

1002. மாதக்க போதத்து, ஆதித்தாபனும் விஞ்சை வேந்தன்
மேதக்கது அருளவேரம் விடத்தக்கது என்றுமிக்க
கோபத்தை உபசமிப்பித்து அருளினைக் கொண்டு நிற்கும்
நோதக்க நீதியுள்ளான் நுவலுதற்கு உள்ளம் வைத்தான்.

பெருமை மிக்க நற்காட்சியினையுடைய ஆதித்யாப தேவனும், வித்துத் தந்தனுடைய மிக்கக் குரோதத் தன்மையும் ஒழிய வேண்டியதே என மனம் கொண்டு, விஞ்சையனது பொங்கும் குரோதத்தைத் தணியச் செய்து, அருள் கொண்டு மேன்மை மிக்க அறத்தினை அவனுக்கு அருள மனம் கொண்டு, அவனுக்குச் சொல்லத் தலைப்படவும், இதற்கு முன் உயர் நெறியைச் சிந்தித்தறியாத வித்துத்தந்தன், இப்போது மனம் கொண்டு செவிமடுத்தான்.

1003. மதகரி மசகம் போல்வார், வசம் வரல் வையம் மூன்றிற்கு
அதிபதியாகும் ஆகாவிதிவசம் வருதல் ஒன்று
மதிபெரிதுடையநீரார் மாற்றிடை இன்பம் மேவார்
விதியற எறிய எண்ணும் விஞ்சையால் விஞ்சை வேந்தே

விஞ்சையர் வேந்தனே! எளிய உருவமு டைய கொசுவைப் போன்ற சிறிய உடலையும் குறைந்த ஆயுளையுமுடைய மனிதர்களுக்கு மதம் மிக்க யானைகளும் அடங்கி அவர் ஏவல் வழி நடக்கும். அந்நிலை அந்த யானைகளின் தீவினைப் பயனாலாகும். மேற்கூறப்பட்ட அவர்களே, உயர்ந்து வீட்டுலகில் நிற்பது அவர்தம் நல்வினையால் அமைவதாகும் - மிக்க நல்ஞானமுடைய மேலோர் பாப திரவ்ய கர்மங்கள் ஒழியுமாறு தங்கள் ஆகம ஞானத்தால் - இந்த இல்லற இன்பத்தில் பொருந்த மாட்டார்கள்.

1004. கோபத்தீக் குடைய ஓடி; நரகத்தைக் குறுகிப் பல்கால்
வேபத்தின் வெதும்பி நின்று எவ்விலங்கினும் சுழன்று வந்தாய்
தாபத்தைத் தணிக்கும் நிழல்போலும் நல்லறத்தை மேவி
ஆபத்தை அகற்றி இன்ப மூர்த்தி நீ ஆக வென்றான்.

குரோதமாகிய நெருப்பு உள்ளே நின்று குடைய அதனால் மனம் போனவாறு ஓடி - கொடிய நரகங்களைச் சேர்ந்து தீவினைத் தாக்கத்தினால் கொதிப்படைந்து அதன் பயனாய் தாவர விலங்குகளில் உழன்று கிடந்து வந்தாய்; இனியாவது, வெப்பத்தைத் தணிக்கும் குளிர்நிழல் போன்ற நல்லறத்தைப் பொருந்தி பாபத்தினால் ஆகும் துன்பங்களைப் போக்கி, இன்பமூர்த்தியாகக் கடவாய் என்றான்.

1005. அழலிடை மலையை ஏந்தி வந்தவன், அம்மலைக்கீழ்
நிழலிடைப் பெற்ற இன்ப நீர்ப்பு, இடும்பைக்கண் இன்பம்
சுழலவும் உழுவை நிற்பத் தளிரினைக் கறித்து மெல்லும்
உழை உறும் இன்பம் போலும், விலங்குறும் இன்பம் என்றான்.

துன்பமயமான இல்லறத்தில் எய்தும் இன்பமானது, பரந்து எரியும் நெருப்பில், மலையைச் சுமந்துசென்ற ஒருவன் அம்மலையின்கீழ் உள்ள நிழலில் பெற்ற இன்பத்தைப் போன்றதாகும். விலங்குகதியில் பெறும் இன்பமானது - நாற்புறமும் புலிகள் சூழ்ந்து நிற்க இடையில் நிற்கும், எளிய மான் மெல்லிய தளிர்களைச் சுவைத்துண்ணும் இன்பத்திற்கு இணையாகும் என்றான்.

1006. அருளிலார்க்கு இல்லை இன்பம் ஆர்கலி உலகத்தின் கண்
பொருளிலார்க்கு இன்பம் இல்லாவாறு போல் பொன் கொள்வாரில்
தெரிவிலார்க்கு இல்லை என்றும் தீநெறிச் செல்லல் நீங்கல்
மருளிலா மனத்தை யாய் நீ மனையறம் மருவுக என்றான்.

கடல் சூழ்ந்த இந்நிலவுலகில் பொருளற்றவர்க்கு இன்பமில்லாததைப்போல், உயிர்கள் மாட்டு அருள் இல்லாதார்க்கும் இன்பமில்லை. பொன் வாணிபம் செய்வார்க்கு அதன் திறனறியும் சக்தியில்லையேல் பயனில்லை, அதுபோல் நற்காட்சியில்லாதவர்களுக்கு இல்லறச் சுழலின் நீங்கி நற்கதியடைதல் இயலாது. எனவே, மயக்கமற்ற மனமுடையனாகி உயர்ந்த இல்லறத்தினை மேற்கொள்வாயாக என்றான்.

1007. அரசன் சஞ்சயந்தனாக, அவற்கு நீ அமைச்சனாகப்
பெரிய மாதேவியானேன், பின்னை அப்பவங்கள் தோறும்
மருவிநாம் மகிழ்ந்து சென்ற பிறப்பு மற்று அதனுக்கப்பால்
ஒருவரால் உரைக்கலாகா உலந்தன பிறவி மேனாள்.

இந்தச் சஞ்சயந்தபட்டாரகன் முன்பு சிம்மசேன அரசனாகவும், நீ அவன் அமைச்சன் ஸ்ரீபூதியாகவும், நான் பட்டத்தரசி இராமதத்தையாகவும் இருந்தோம். இப்போது நான் சொன்ன பல பிறவிகள் வினைப்பயனால் நாம் விரும்பிப் பெற்றவையாகும், அப்பிறப்புகளுக்கு முன்பும் நாம் எடுத்து விடுத்தப் பிறவிகளை யாராலும் எண்ணிச்சொல்ல இயலாது என்றான்.

1008. இணையன கேட்டுத் தன்னை இழித்து அந்த வித்துத்தந்தன்
மனம் மலி கறுவு நீங்கி வானவன் தன்னை வாழ்த்திக்
கனைகழல் அரசன்தன் மேல், கறுவினால் பிறவிதோறும்
நினைவிலேன் செய்ததீமை, நீங்குமாறு அருளுக என்றான்.

இத்தகைய அனைத்தையும் கேட்ட வித்துத்தந்தன், தன்னைத்தானே பழித்து மனதில் தங்கிய குரோதம் நீங்கவும், ஆதித்யாப தேவனை மனமார வாழ்த்தி கழலணிந்த சிம்மசேன அரசன் மேல்கொண்ட துவேஷத்தினாலே, எடுத்த பிறவிகளெல்லாம் நல்லுணர்வில்லாமல் நான் இயற்றிய கொடுமைகள் நீங்கும் வண்ணம் எனக்கு நல் உபதேசத்தை அருளுக என வேண்டினன்.

1009. இறைவனாய் உலகம் ஏத்த, இருந்த சஞ்சயந்தன் பாதம்
நறைஉலா மலர்கள் தூவி, வணங்கென நமோ என்றேத்தி
அறிவிலேன் செய்ததீமை பொறுக்க என்று அவுணன் போனான்
உறுதி நின்று உரைத்த வானோன் உவந்து தன் உலகம் புக்கான்.

மூன்று உலகத்தவரும் இறைவன் என்று போற்றுமாறு இருந்த சஞ்சயந்த பட்டாரகரது, பாதங்களை மலர்களால் அர்ச்சித்து வணங்கு என்றான். வித்துத்தந்தன், நமோத்து எனக்கூறி வழிபட்டு அறிவற்றவனாகிய நான் செய்த தீமைகளை இறைவனே பொறுத்தருள்க எனவேண்டிய பிறகு தனது இருப்பிடம் எய்தினான். உறுதியை உரைத்த ஆதித்யாப தேவனும் மனம் மகிழ்ந்து தனது உலகம் அடைந்தான்.

1010. கருவினால் ஒருவன் என்றும் கடுநவை நரகில் ஆழ்ந்தான்
பொறையினால் ஒருவன் புத்தேள் உலகெய்தி வீடுபுக்கான்
கறுவொடு பொறையின் ஆய பயனிவை கண்டு பின்னும்
பொறையொடு செறிவிலாதார் புல்லறி வாளர் அன்றே.

குரோத உணர்வினாலே ஸ்ரீபூதி அமைச்சனானவன், இடையறாது துன்பமயமான உலகங்களிலே ஆழ்ந்து உழன்றான். பொறுமையை ஏற்றதால், சிம்மசேன மாமன்னன் பன்முறை விண்ணுலகெய்தி, இறுதியில் வீடுபெற்றான். குரோதத்தினாலும், பொறாமையினாலும் விளையும் பயன்களை அறிந்தபிறகும் பொறையினை மேற்கொள்ளாதவர்கள், புல்லறிவாளர்கள் அல்லவா!